III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.229/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 23-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : E.Jeevanantham | Village | : |
| Father's / Husband's Name | : Ellappan | Calling | : |
| Age | : | Taluk | : |

குறுக்கு விசாரணை

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

பிரதிவாதியை எனக்கு 6, 7, 8 வருடங்களாக தெரியும். பிரதிவாதியின் மச்சான் என்னுடைய கட்டிடத்தில் காலேஜ் நடத்தி வந்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய பில்டிங்க்கு பக்கத்தில் மகாலிங்கம் மனைவி சுசிலாவுக்கு சொந்தமான பில்டிங்கில் பிரதிவாதி வாடகைக்கு வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி சுசிலாவின் பில்டிங்கில் சுமித் மிஷின் டுல்ஸ் என்னும் பெயரில் தொழில் நடத்தி வந்தார்க என்றால் சரிதான். அந்த பில்டிங்கில் அவர் தொழில் நடத்தி வரும்பொழுது தான் எனக்கு அறிமுகம் ஆனார். நான் சீட்டு நிறுவனம் நடத்தி வந்ததால் அவரிடம் சீட்டில் சேர சொல்லி கேட்டேன் என்றால் சரியல்ல. நான் நடத்தி வந்த ஜீவா சிட் பண்ட் நிறுவனத்தில் பிரதிவாதி உறுப்பினராக சேர்ந்து கலந்துகொண்டாரா என்றால் இருக்கலாம். 2005 முதல் 2011 வரை பலதரப்பட்ட சிட்களில் பிரதிவாதி கலந்து கொண்டிருக்கிறார் என்றால் இருக்கலாம். உறுப்பினராக இருந்தாரா இல்லையா என்று என்னால் உறுதியாக சொல்லமுடியுமா என்றால் இருக்கலாம் என்னால் உறுதியாக கூற முடியாது. சீட் நிறுவனத்தை நான் பதிவு செய்து தான் நடத்தி வந்தேன். குறிப்பிட்ட வருடத்தில் அது முடிந்துவிட்டது. எந்த வருடம் வரை சீட் நடத்தி வந்தேன் என்றால் 2008, 2009 இருக்கலாம் என்னால் உறுதியாக சொல்ல முடியாது. சீட் நடத்துவதற்கான பதிவேடுகளை பராமரித்து வந்தேன். அந்த ரிஜிட்டரில் யார் எந்த தேதியில் சீட்டில் சேர்ந்தார்கள், எவ்வளவு தொகைக்கு சீட் எடுத்தார்கள் சூரிட்டிக்கு என்ன டாக்குமெண்ட் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் எல்லாம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரிஜிட்டரில் பார்த்தால்

பிரதிவாதி எந்தெந்த தேதியில் எந்தெந்த சீட்டுகளில் சேர்ந்து எனனென்ன டாக்குமெண்ட் சூரிட்டிக்காக கொடுத்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் இதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பிரதிவாதி 2008 ஆம் ஆண்டு வரை என்னிடம் நேரடியாக சீட்டுக்கான பணத்தை கொடுத்துக்கொண்டிருந்தார் என்றால் அது தனிக் கணக்கு அதற்கான பணத்தை கொடுத்திருக்கலாம். அது என்னுடைய கவனத்திற்கு இல்லை. 2008 ல் பிரதிவாதி திருமுல்லைவாயலில் சொந்தமாக இடம் வாங்கி கம்பெனி தொடங்கினார் என்றாலும் அதன் திறப்பிற்கு நான் சென்றேன் என்றாலும் சரியல்ல. 2008 ல் சுசிலா பில்டிங்கிலிருந்து பிரதிவாதி சொந்த கட்டிடத்திற்கு சென்றபின் என்னுடைய கலெக்சன் ஏஜென்ட் சுரேஷ் மூலமாக பிரதிவாதியிடம் சீட்டு பணம் வசூலித்து வந்தேன் என்றால் இருக்கலாம். சீட்டு பணம் கொடுக்கும்பொழுது ரொக்கமாக கொடுப்பேனா காசோலை மூலமாக கொடுப்பேனா என்றால் உறுப்பினர் எப்படி கேட்கின்றாரோ அந்த வகையில் கொடுப்பேன். சீட்டு பணம் குறிப்பிட்ட காலத்தில் கட்டவில்லை என்றால் உறுப்பினர்களிடம் இருந்து வசூலிப்பேன் என்றால் சரியல்ல. அதிகமான பணத்தை பிரதிவாதிகளிடம் இருந்து வசூலித்ததால் தான் அவர் என்னிடம் சீட்டுபோடுவதை குறைத்து வந்தார் என்றால் சரியல்ல. சீட்டு பணம் வசூலிக்கும்பொழுது வாங்கிய பணத்திற்கு சீட்டு விதிகளின் படி ரசீது கொடுப்பது வழக்கம். எனது நிறுவனத்திலிருந்து பணம் செலுத்துபவர்களுக்கு கொடுக்கப்படும் ரசீது தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.த.சா.ஆ.1 (7 எண்ணிக்கைகள்). என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனத்திலிருந்து வழங்கக்கூடிய பாஸ்புக் என்றால் சரிதான். அது பி.வா.த.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்ட மற்றொரு வரிசை ரசீதுகள் தான். அது பி.வா.த.சா.ஆ.3 (2 எண்ணிக்கைகள்). என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனத்தின் பாஸ்புக். அது பி.வா.த.சா.ஆ.4. என்னிடம் காட்டப்படுவது பிரதிவாதி மற்றொரு சீட்டில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள் என்றால் சரிதான். அது பி.வா.த.சா.ஆ.5 (5 எண்ணிக்கைகள்). அதற்குறிய பாஸ்புக். அது பி.வா.த.சா.ஆ.6. மேலே சொன்ன மூனு சீட்டுகளுக்கு பிரதிவாதிகள் என்ன ஆவணம் கொடுத்தார் என்ற விவரம் ரிஜிஸ்டரில் இருக்கும் என்றால் அது காலாவதியான விஷயம். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பே காலாவதியாகிவிட்டது. சீட்டு நிதி சட்டத்தின் படி காலாவதியாகிவிட்டாலும் இந்த ரிஜிஸ்டர்களை நான் பாதுக்காப்பாக வைத்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த ரிஜிஸ்டர்களை பார்த்தால்

பிரதிவாதிகளிடம் எந்த தேதியில் வாங்கினேன் அதனை எந்த தேதியில் கொடுத்தேன் என்ற விவரம் தெரிய வரும் என்றால் தெரியவரும். ஆனால் காலம் கடந்தது. சீட்டில் சேர்ந்த உறுப்பினர்கள் சீட்டை முடிக்கும்பொழுது அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களை அதற்கென்று உள்ள பதிவேட்டில் பதிவு செய்து திரும்ப கொடுக்க வேண்டும் என்றால் அக்கவுண்ட் புக்கில் பின்புறம் கடைசி பக்கத்தில் கையெழுத்து வாங்கி முடிவு பெற்றது என்று மேற்குறிப்பு செய்வோம்.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).